ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2380/35 - 2024 අප්‍රේල් මස 19 වැනි සිකුරාදා - 2024.04.19
*2380/35 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம்**

53 ஆம் பிரிவின் கீழ் கட்டளை

2021ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 53 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் விதப்புரைகளைக் கருத்திற்கொண்டும் அமைச்சரவையின் அங்கீகாரத்தின் மேலும்–

(அ) அமைச்சரவை, 2024, ஏப்பிறல் 08 ஆந் திகதிய 24/0651/631/016 ஆம் இலக்க அதன் முடிபின் மூலம் இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் வியாபாரத்தை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வியாபாரமொன்றாகக் குறித்தலை அங்கீகரித்துள்ளது எனவும் ;.

(ஆ) செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வியாபாரமொன்றாக அத்தகைய வியாபாரத்தைக் கருதுகின்றமைக்கான நியாயமான தன்மை இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்டவாறாகவுள்ளது எனவும் ;

(இ) சட்டவாக்கங்களின் கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் இதற்கான அட்டவணை III இல் குறிப்பிடப்பட்டவாறாகவிருத்தல் வேண்டும் எனவும் ; அத்துடன்

(ஈ) குறித்துரைக்கப்பட்ட சட்டவாக்கங்களின் கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் இதற்கான அட்டவணை IV இல் குறித்துரைக்கப்பட்ட திகதிகளில் தொடங்குதலும் நடைமுறையில் இல்லாதொழிதலும் வேண்டும் எனவும்,

இக்கட்டளை மூலம் குறித்துரைக்கின்றேன்.

**ரணில் விக்கிரமசிங்க,**
முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்.

கொழும்பு,
2024, ஏப்பிறல் 19.

**அட்டவணை I**

**செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வியாபாரமொன்றாகக் குறிக்கப்பட்ட வியாபாரம் பற்றிய விபரங்கள்**

| | |
|---|---|
| 1. அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் பெயர் | எச்சலன் டிரேட் (பீவீஉ) எல்டீடி (Echelon Trade (pvt) Limited) |
| 2. உரிம இல. | 2306200014 |
| 3. உரிமம் வழங்கப்பட்ட திகதி | 2023, ஒற்றோபர் 06<br>வியாபாரம் ஆரம்பிக்கின்ற திகதி உரிமம் வழங்கப்பட்ட நாளிலிருந்து 6 மாதங்களுக்குள் இருக்க வேண்டும்.<br>(2022 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க அங்கீகரிக்கப்பட்ட நபர்களின் பதிவுசெய்தல், உரிமம் வழங்குதல், அங்கீகாரம் வழங்குதல் மற்றும் ஏனைய அங்கீகாரங்கள் என்பவற்றிற்காக ஒழுங்குவிதிகளின் 27 ஆம் ஒழுங்குவிதியைப் பார்க்கவும்.) |
| 4. கரைகடந்த கம்பெனி பதிவு இலக்கம்: | பீசீசீ 00284521 |
| 5. செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரத்தின் வகுப்பாக்கம் | செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வியாபாரம் |
| 6. விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்களுக்கான உரித்துடைமை | எச்சலன் டிரேட் (பீவீஉ) எல்டீடி ஆனது செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வியாபாரம் ஒன்றாக மட்டுமே குறிக்கப்படுகின்றதுடன் செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதனிலை வியாபாரம் ஒன்றாகக் குறிக்கப்படுவதற்குத் தகவுடையதாகவில்லை. |
| 7. தகவுடைமைக் கட்டளைகள் | 2023, ஓகத்து 04 ஆந் திகதிய 2343/60 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகர (செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்களுக்கு விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் வழங்குவதன் மீதான வழிகாட்டுநெறிகள்) பற்றிய ஒழுங்குவிதிகளின் 4(2)(அ) மற்றும் 4(3)(அ) என்னும் ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட கட்டளைகள். |
| 8. ஏற்புடையற்பாலதான விலக்களிப்பு அல்லது ஊக்குவிப்புத் திட்டம் | 2023 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகர (செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்களுக்கு விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் வழங்குவதன் மீதான வழிகாட்டுநெறிகள்) பற்றிய ஒழுங்குவிதிகளின் 5 ஆம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட திட்டம். |

**அட்டவணை II**

**செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வியாபாரமாகக் கருதுவதற்கான நியாயமான தன்மை**

கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு (5) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் குறிக்கோள்கள், கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 53 (5) இல் கூறப்பட்டுள்ளவாறு தேசிய நலனை அல்லது தேசிய பொருளாதாரத்தின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, கொழும்புத் துறைமுக நகரத்தை இஸ்தாபிப்பதன் வெற்றியை உறுதி செய்வதற்காக வியாபாரங்களை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரமாக நியமிப்பதில் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

எச்சலன் டிரேட் (பீவீஉ) எல்டீடி நிறுவனம், ஆரம்ப முதலீடான 2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தொகையுடன் கொழும்புத் துறைமுக நகரத்தில் ஒரு செயல்நுணுக்க மற்றும் கட்ட முதலீட்டுக்கு அர்ப்பணிப்புச் செய்துள்ளது என்பதோடு அதனைத் தொடர்ந்து இரண்டாம் ஆண்டில மேலதிகமாக 3 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களும், மூன்றாம் ஆண்டில் 5 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களும், நான்காம் ஆண்டில் 6.5 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களும், ஐந்தாவது ஆண்டில் 8 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுடன் மொத்த முதலீட்டில் 24.5 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் உச்சத்தை அடையும் சீனா, ஹொங்கொங், ஜப்பான், சிங்கப்பூர், இந்தியா, பாகிஸ்தான், இந்தோனேஷியா, ஐக்கிய அமெரிக்கா, துருக்கி, தாய்லாந்து மற்றும் வியட்னாம் உள்ளிட்ட பல உலக சந்தைகளில் துணிகள், ஆடைகள், ஆடம்பர கடிகாரங்கள், தங்கம் மற்றும் இரத்தினக் கற்கள், இலத்திரனியல் பொருட்கள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் போன்றவற்றின் உலகளாவிய வர்த்தகத்தில் ஈடுபடுவதை எச்சலன் டிரேட் (பீவீஉ) எல்டீடி நோக்கமாகக் கொண்டுள்ளது.

எச்சலன் டிரேட் (பீவீல) எல்டீடி நிறுவனத்தின் எதிர்பார்க்கப்படுகின்ற வணிக மாதிரியானது கணிசமான அந்நியச் செலாவணி வரவு பொருளாதார கட்டமைப்பை ஊக்குவித்தல் மற்றும் இலங்கை மற்றும் முக்கிய சர்வதேசச் சந்தைகளுக்கு இடையே வர்த்தக உறவுகளை வளர்த்தல் என்பவற்றை முன்னறிவிக்கிறது. மேலும், எச்சலன் டிரேட் (பீவீல) எல்டீடி நிறுவனத்தின் விரிவாக்கமானது, கொழும்புத் துறைமுக நகரத்திற்குள் கணிசமான வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்குத் தயாராக உள்ளது. அடுத்த 5 ஆண்டுகளுக்குள் 40 முதல் 50 இலங்கையர்களைப் பணியமர்த்துவதன் மூலம், உள்நாட்டுப் பொருளாரத்திற்குத் துணையாக நியமிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களில் வருமானம் ஈட்ட முடியும்.

**அட்டவணை III**

**சட்டவாக்கங்களின் கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புகள்**

| *சட்டத்தின் அட்டவணை II இன்கீழ் நிரற்படுத்தப்பட்ட சட்டவாக்கங்கள்* | *வழங்கப்பட்ட விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புகள்* |
|---|---|
| 1. 2017ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம் | அ) பகிர்ந்தளிக்கப்பட்ட எல்லா வருமானங்களும், இலாபங்களும் மற்றும் பங்கிலாபங்களும் இச்சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட எல்லா வரிகளிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும்.<br>ஆ) செலுத்தப்பட்ட எல்லாக் கொடுப்பனவுகளும் இச்சட்டத்தின்கீழ் குறித்துரைக்கப்பட்ட பிடித்து வைத்தல் வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும். |
| 2. 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டம் | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறு எல்லா வியாபாரம் தொடர்பான பண்டங்கள் மற்றும் சேவைகளின் இறக்குமதிகளும் உள்நாட்டுக் கொள்வனவுகளும் இச்சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட வரிகளிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும். |
| 3. 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம் | இச்சட்டத்தின் எல்லா ஏற்பாடுகளிலிருந்துமான விலக்களிப்பு. |
| 4. 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க. நிதிச் சட்டம் | இச்சட்டத்தின் எல்லா ஏற்பாடுகளிலிருந்துமான விலக்களிப்பு. |
| 5. 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறு எல்லா வியாபாரம் தொடர்பான பண்டங்களின் இறக்குமதிகளும் உள்நாட்டுக் கொள்வனவுகளும், இச்சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட எல்லா வரிகளிலிருந்தும், தீர்வைகளிலிருந்தும் மற்றும் அறவீடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும். |
| 6. (235 ஆம் அத்தியாயமான) சுங்க கட்டளைச் சட்டம் | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறு எல்லா வியாபாரம் தொடர்பான பண்டங்களின் இறக்குமதிகளும் உள்நாட்டுக் கொள்வனவுகளும் இச்சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட எல்லா வரிகளிலிருந்தும், மற்றும் அறவீடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும். |
| 7. 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம் | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறு எல்லா வியாபாரம் தொடர்பான பண்டங்களின் இறக்குமதிகளும் உள்நாட்டுக் கொள்வனவுகளும், இச்சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட எல்லா வரிகளிலிருந்தும், தீர்வைகளிலிருந்தும் மற்றும் அறவீடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும். |
| 8. 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறு எல்லா வியாபாரம் தொடர்பான பண்டங்களின் இறக்குமதிகளும் உள்நாட்டுக் கொள்வனவுகளும், இச்சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட எல்லா வரிகளிலிருந்தும், தீர்வைகளிலிருந்தும் மற்றும் அறவீடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும். |
| 9. 1988 ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டம் | இச்சட்டத்தின்கீழ் விலக்களிப்பு அல்லது ஊக்குவிப்பு எதுவும் வழங்கப்படுவதில்லை. |
| 10. 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) சட்டம் | இச்சட்டத்தின் எல்லா ஏற்பாடுகளிலிருந்துமான விலக்களிப்பு. |

| *சட்டத்தின் அட்டவணை II இன்கீழ் நிரற்படுத்தப்பட்ட சட்டவாக்கங்கள்* | *வழங்கப்பட்ட விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புகள்* |
|---|---|
| 11. (267 ஆம் அத்தியாயமான) களியாட்ட வரிக் கட்டளைச் சட்டம் | இச்சட்டத்தின்கீழ் விலக்களிப்பு அல்லது ஊக்குவிப்பு எதுவும் வழங்கப்படுவதில்லை. |
| 12. 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் | 2022, யூன் 3 ஆந் திகதிய 2282/59 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (கொழும்புத் துறைமுக நகரில் முதலீடுகள்) ஒழுங்குவிதிகள் தவிர்ந்த இச்சட்டத்தின் எல்லா ஏற்பாடுகளிலிருந்துமான விலக்களிப்பு. |
| 13. 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டம் | இச்சட்டத்தின்கீழ் விலக்களிப்பு அல்லது ஊக்குவிப்பு எதுவும் வழங்கப்படுவதில்லை. |

**அட்டவணை IV**

**வழங்கப்பட்ட விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்களின் செல்லுபடியாகும் காலப்பகுதி**

| *சட்டத்தின் அட்டவணை II இன்கீழ் நிரற்படுத்தப்பட்ட சட்டவாக்கங்கள்* | *தொடங்கும் திகதி* | *முடிவுறும் திகதி* |
|---|---|---|
| 1. 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம் | 2024, ஏப்பிறல் 20 | 2049, ஏப்பிறல் 19 |
| 2. 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டம் | 2024, ஏப்பிறல் 20 | 2049, ஏப்பிறல் 19 |
| 3. 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம் | 2024, ஏப்பிறல் 20 | 2049, ஏப்பிறல் 19 |
| 4. 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டம் | 2024, ஏப்பிறல் 20 | 2049, ஏப்பிறல் 19 |
| 5. 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | 2024, ஏப்பிறல் 20 | 2049, ஏப்பிறல் 19 |
| 6. (235 ஆம் அத்தியாயமான) சுங்க கட்டளைகள் சட்டம் | 2024, ஏப்பிறல் 20 | 2049, ஏப்பிறல் 19 |
| 7. 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம் | 2024, ஏப்பிறல் 20 | 2049, ஏப்பிறல் 19 |
| 8. 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் | 2024, ஏப்பிறல் 20 | 2049, ஏப்பிறல் 19 |
| 9. 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டம் | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |
| 10. 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) சட்டம் | 2024, ஏப்பிறல் 20 | 2049, ஏப்பிறல் 19 |
| 11. (267 ஆம் அத்தியாயமான) களியாட்ட வரிக் கட்டளைச் சட்டம் | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |
| 12. 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் | 2024, ஏப்பிறல் 20 | 2049, ஏப்பிறல் 19 |
| 13. 2010 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டம் | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |

EOG 04 - 0165

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.